Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 07 | 22 - 07 - 1992 | புதன்கிழமை | ஓசை 155

## பொறியியல், மருத்துவம் தமிழில் கற்பிக்கப்படும்

### தமிழ்நாடு கல்லூரிகள் ஏற்பாடு

தமிழகத்தில் முதன் முறையாக பொறியியல், மருத்துவம் தனித்தமிழில் கற்பிக்கப்பட உள்ளது. இதற்கென தஞ்சையில் இரண்டு பொறியியல், மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட உள்ளன. இன்னும் இரண்டு மாதங்களில் பொறியியல் கல்லூரியும் அடுத்த ஆண்டில் மருத்துவக் கல்லூரியும் அமைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொறியியல் பாடநூல்கள் யாவும் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவ பாட நூல்கள் விரைவில் தயாரிக்கப்பட்டுவிடும் எனவும் தமிழகத்துச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# விமானப் படை எதிர்கொள்ளும் நெருக்கடி

# போருக்கு உதவமுடியாது திண்டாட்டம்

## விமானிகள், விமானங்கள் இழப்பால் முடங்கல் நிலை

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படை சமீப காலத்தில் பாரிய இழப்புக்களைச் சந்தித்ததைத் தொடர்ந்து முழுமையாக இயங்க முடியாது முடங்கிப் போயுள்ளது. இவ் வருடத்தில் பெரும் எண்ணிக்கையான விமான ஓட்டிகள் கொல்லப்பட்டமையும், பல விமானங்களை இழந்தமையுமே இம் முடக்கத்திற்குக் காரணமாகும். இதனால், போரில் ஈடுபடும் இராணுவத்தின் தேவைக்கேற்ற விதத்தில் விமானப்படை உதவ முடியாது உள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து சிறிலங்கா விமானப்படை பாரிய இழப்புக்களைச் சந்தித்து வருகின்றது. இவ்வருட ஆரம்பத்தில் சீனன்குடா விமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட பாரிய குண்டுவெடிப்பால் பல பயிற்றப்பட்ட விமானிகளையும், யுத்தவிமானம், மற்றும் உலங்குவானூர்தி ஆகிய போர் தளபாடங்களையும் சிறிலங்கா விமானப் படை இழக்க நேரிட்டது

அதேவேளை திருமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்களில் சிக்கி பல விமானப்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். இதுவும் விமானப்படையினருக்குப் பெரிய இழப்பையே ஏற்படுத்தியது.

இறுதியாக வை-8 விமானம் புலிகளால் சுட்டுவீழ்த்தப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களுக்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

பரீட்சையை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக வளவினுள ஜெனரேறறர் மூலம் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது

அடுத்தமாதம் 17ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள கலைப்பீட பரீட்சையை முன்னிட்டே மின்சாரம் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவிவரும் மண்ணெய் தட்டுப்பாட்டை முன்னிட்டு விடுதி மற்றும் மாணவர்களின் நலன் கருதி இவ் ஏற்பாடு செய்யப்படிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பெருப்பாலும் இனறு முதல் மினவிநியோகம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## நீர்கொழும்பில் 80 தமிழர் பொலிசாரால் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பில் எண்பது தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஐவர் தடுத்து வைசகப்பட்டுள்ளனர் எனவும் கள் தெரிவித்தன.

இந்த ஐவரும் வெளிநாடு செல்ல என நீர்கொழும்பில் தங்கியிருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது ஏற்கனவே வெளிநாடு செல்லவென வத்தளையில் தங்கியிருந்த 13 இளைஞர்கள் பொலிசாரி

## ரயில்மீது தாக்குதல் 6 பேர் பலி; 5 பேர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டியில் புகையிரதத்தின் மீது ஆயுதபாணிகள் நடாத்திய தாககுதலில் ஆறுபேர் கொல்லப்பட்டதாகவும் மேலும் ஐந்து பேர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ருந்த புகையிரதம் மீதே சித்தாண்டியில் வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் இறந்தவர் அனைவரும் முஸ்லிம்கள் என தெரியவருகிறது.

'சிவப்பு கொடியைக் காட்டி புகையிரதத்தை நிறுத்தியவர்கள்' புகையிரத இஞ்சினை

## வீரசாதனை புரிந்த வேங்கைகளுக்கு தலைவர் பிரபா பரிசளிப்பு



வண்ணான்குளம் இராணுவ முகாம் தகர்ப்பில் மிகவும் திறம்படச் செயற்பட்ட போராளிகளைக் கௌரவித்து தலைவர் பிரபாகரன் பரிசில்களை வழங்கினார். நேற்று நடைபெற்ற இவ்வைபவத்தில் 11 புலிப்படை வீரர்களுக்கு தலைவரால் பரிசில்கள் வழங்கப்பட்டன. போராளிகளான ஈழவன், சோதி, இன்பன் வாசுதேவன்

இவர்களில் ஐவர் தடுத்து வைசகப்பட்டுள்ளனர் எனவும் ஏனையோர் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்

தலையில் தங்கியிருந்த 13 இளைஞர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டி

# வடக்கு-கிழக்கு இணைப்பை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும்

வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைப்பதை எதிர்க்கும் தீர்மானம் ஒன்றை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது கருத்தொற்றுமை மாநாட்டில் நிறைவேற்றியுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இம்மாநாட்டில் நிரந்தரமாக நிலைத்திருக்கக் கூடிய ஒரு சமாதானத்தை ஏற்படுத்துவதும் நிரந்தரமாக வடக்கு-கிழக்கை பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு அளிப்பதெனவும் அம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## முஸ்லிம் இனியும் உதைபந்தாக இடமளியோம்

(கொழும்பு)

- அஷ்வர்

முஸ்லிம்களை உதைபந்துகளாக கருத இனியும் இடமளிக்க மாட்டோம் என்று முஸ்லிம் கலாசார இராஜாங்க அலுவல்கள் அமைச்சர் அஷ்வர் கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் முஸ்லிம்கள் உதைபந்துகளாக இடமளிக்க மாட்டோம் எனவும், இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட போது முஸ்லிம்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள எவரும் முற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

## அம்பாறை மாவட்டத்திற்கு 3 எம்.பிகள் வேண்டும்

(கொழும்பு)

- அமைச்சர் மன்சூர்

அம்பாறை மாவட்டத்திலிருந்து மூன்று முஸ்லிம் எம்.பிக்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்று அமைச்சர் மன்சூர் பொத்துவிலில் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். அங்கு மின்சாரம் வழங்கும் திட்டமொன்றைத் திறந்து வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில் இனநீதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கமும் அரசபடைகளும் மனச்சாட்சி அற்றவையாம்

கறுப்புப் பூனைகளால் படுகொலை செய்யப்பட்ட 1200 பேரின் பெயர்ப்பட்டியல் தன்னிடம் உள்ளது என முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பிரேமதாச உடுகம்பொல தெரிவித்துள்ளார்.

இப்பட்டியலை தான் உரிய அதிகாரிகளிடமும் பத்திரிகைகளிடமும் கொடுத்துள்ளதாகவும் கொலையுண்டவர்கள் எப்போது கடத்தப்பட்டார்கள்? அவர்களது சடலங்கள் எப்போது எங்கே கண்டு பிடிக்கப்பட்டன என்ற விபரங்களும் அப்பட்டியலில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

நான் சரணடைந்தால் எனது உயிருக்கு பாதுகாப்பு இருக்காது என அஞ்சுகின்றேன். நானாக சரணடைந்தாலோ அல்லது அரசாங்கம் கைது செய்தாலோ எனக்கு ஏதாவது நிகழும் என அஞ்சுகிறேன் இன்று அரசாங்கமும் அரசாங்க படைகளும் மனச்சாட்சியற்றவையாகஇருக்கின்றன. அவர்கள் நியாயத்தின் பக்கம் நிற்கவில்லை. இந்த நாட்டின் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு அவர்களே பொறுப்பு என மேலும் அவர் தெரிவித்தார்.

புகையிரதத்தை நிறுத்தியவர்கள்' புகையிரத இஞ்சினை குண்டு வைத்து தகர்த்ததோடு தீயுமவைத்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிசாரால் கைது

(கொழும்பு)

ஊர்காவல்படையைச் சேர்ந்த ஏழுபேர் ஓட்டமாவடியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஓட்டமாவடி சிறிலங்கா காவத்தை முனைப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பல இலட்சம் பணம் யுத்தத்தில் வீணாகிறது

(கொழும்பு)

- அனுரா

சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையே தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தில் தினமும் பல சிங்களவர்களும் தமிழர்களும் பலியாகிவருகிறார்கள். அத்துடன் பல இலட்ச ரூபா பணமும் வீணாக செலவிடப்படுகின்றது ஆகையால் இவ் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அகில இலங்கை அமைப்பாளரும்எம்.பி.யுமான அனுரா பண்டார நாயக்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்நகர், பொன்னாலை; நேற்று எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

நேற்றும், நேற்றுமுன்தினம் இரவும் மண்டைதீவுப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் யாழ்நகரின் கரையோரப்பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தினையும்மேற்கொண்டனர். இதில் ஒருவர் அதிர்ச்சியினால் மரணமடைந்தார்.

நேற்றுமுன்தினமிரவும்,நேற்றுக்காலையும் இராணுவ காவலரண்களிலிருந்து தொடர்ச்சியாக ஏவப்பட்ட பல எறிகணைகள் கோட்டை, கொட்டடி, தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. எனினும் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தெரியவில்லை. தொடர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

நேற்று நடைபெற்ற இவ்வைபவத்தில் 11 புலிப்படை வீரர்களுக்கு தலைவரால் பரிசில்கள் வழங்கப்பட்டன. போராளிகளான ஈழவன், சோதி, இன்பன் வாசுதேவன் தூயவன். சுயா, தூயமணி, ஊரான், சித்திரன், யாகசீலன், பாரதி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். போராளியான ஈழவன் தலைவரிடமிருந்து பரிசுகளைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

# சிறிலங்கா அமைச்சரும் தளபதியும் வட பகுதிக்கு விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்புத்துறை இராஜாங்கஅமைச்சர் ஜோன்அமரதுங்கவும், கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஹமில்டன் வணசிங்கவும்நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் செய்ததாகத் தெரியவருகிறது.

பலாலியில் பலவேகய இரண்டு இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரட்ணா ஆகியோருடன் அவர் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து புலர் விலகி வருவதாகவும், வெற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு வரையிலான பகுதி இராணுவக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும், தீவுப் பகுதிகளில்சிவில் நிர்வாகத்தை கொண்டுவரும் முகமாக ஒவ்வொரு தீவிலும் ஒவ்வொரு பொலிஸ் நிலையம் நிறுவப்பட்டிருப்பதாகவும், வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு பகுதியில் மீனவர்கள் கடற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்திற்கு முஸ்லிம்மேலதிக அரச அதிபர்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்திற்கு முஸ்லிம் மேலதிக அரசாங்க அதிபரும், பேசாலைக்கு ஒரு உதவி அரசாங்க அதிபரும் நியமிக்கப்படுவர்.

இத்தகவலை பொதுநிர்வாக அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் என். ஜுனைத் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் மாவட்டத்திற்கு முஸ்லிம் ஊர்காவற்படையினரை நியமிக்கும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நிவாரணம் நிறுத்தப்பட்டதை எதிர்த்து தீவக மக்கள் செயலகம்முன் மறியல்

இடம்பெயர்ந்த தீவகமக்கள் தங்களுக்கு நிவாரணம் நீண்ட நாட்களாக நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து செயலக முன்றலில் மறியல் போராட்டம் செய்ததின் எதிரொலியாக யாழ்.செயலகம் உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்றுக்காலை செயலகமுன்றலில் நூற்றுக்கு மேற்பட்ட இடம் பெயர்ந்த தீவக மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததை அடுத்து யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு உடனடியாகசம்பந்தப்பட்ட பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரிகளை அழைத்து நடைபெற்ற அவசர கூட்டத்தில் உடனடி நிவாரணம் வழங்கும்படி உத்தரவு சம்பந்தப்பட்ட ப.நோ.கூ. சங்கங்ளுக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது

இதைத் தொடர்ந்து நேற்று பிற்பகல் 2.00 மணி தொடக்கம் நிவாரணம் வழங்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

## வரி விளம்பரம்

**BASIC**

*COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE* புதிய பிரிவு ஆரம்பம் 25 - 07 - 92 சனி 10.30 மணி I. A B. (ALL STAGES), SHORTHAND & TYPING நடைபெறுகின்றன. SCHOOL OF BUSINESS ADMINISTRATION 16 3rd Cross Steet Jaffna. (4736)

**கலந்துரையாடல்**
(நல்லூர்)

செம்மணி மயானத்தை புனருத்தாரணம் செய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று செங்குந்தா இந்துக் கல்லூரி மண்டபத்தில் 26-07-92 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படிமயானத்தைப் பாவிக்கும் மக்கள் மத்தியில் உள்ள சகல சனசமூக நிலையங்களின் உத்தியோகஸ்தர்கள் கிராம சேவையாளர்கள் நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் கலந்து கொள்ளவும்.

## "இசைமாலை"

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த "இசைமாலை" நிகழ்ச்சி எதிர்வரும் யூலை 28-ம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றது.

இடம்: காசிப்பிள்ளை அரங்கு - யூலை/28
— அரியாலை

யாழ். பல்கலைக்கழகம் - யூலை/29
சிவப்பிரகாசவித்தியாசாலை-யூலை/30
— சங்கானை

காலம்: மாலை 7-00 மணி

நுழைவுச்சீட்டுக்கள்:

| | |
|---|---|
| 1000/- | – குடும்பத்தினருக்குரியது. |
| 500/- | – ,, |
| 100/- | – இருவருக்குரியது. |
| 50/- 25/- | – தனி ஒருவருக்குரியது. |
| 10/- 5/- | – பாடசாலை மாணவர்களுக்குரியது. |

ஏனைய இடங்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(2857) நிர்வாகத்தினர், செஞ்சோலை.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம் 10 — 02 — 1970



வீரச் சாவு 22 — 07 — 1991

### மேஜர் ரெட்ணராஜ் / ரெட்டி
( தம்பி )
[தம்பிப்பிள்ளை அந்தோனிதாசன்]

22-07-91 அன்று ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது புல்லாவெளியில் நடத்தப்பட்ட 'தகர்த்தெறிந்து நுழைதல்' தாக்குதலின்பின் அதனை முறியடிக்க முயன்ற இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வண்ணக்கனவுகள் வளரும் வயதிலே
வாசலைத்திறந்து பாசறைவந்தவன்!
சின்ன விழிகளில் நெருப்பைச்சுமந்தவன்!
சீறும் புலிப்படையணியில் கலந்தவன்!
அன்னை மண்ணை மீட்கும் பணியிலே
ஆனையிறவை அதிர்ந்திடச்செய்தவன்!
விண்ணைப்பிளக்கும் வேங்கைப் போரினில்
வீழ்ந்து போனவன்! விதையாயானவன்!

இதே மோதலில் வீரச்சாவடைந்த அனைத்துப் போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி, மன்னார். (சி, 4729) குடும்பத்தினர்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம் 10 — 09 — 1972



வீரச்சாவு 22 — 07 — 1991

### மாவீர வேங்கை லெப். திலக்
(சேதுலிங்கம் கிருஷ்ணவரதன்)
அவர்களின் பிரார்த்தனம்
திதி: 22 · 07 · 1992

## நினைவு கூருகின்றோம்... 1992 - 07 - 22

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-
* **கீர்த்தி** (சாமித்தம்பி புவிராஜகீர்த்தி - தம்பிலுவில் அம்பாறை)

மட்டக்களப்பு ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**2-ம் லெப். விவே** (சாமித்தம்பி உதயச்சந்திரன் - ஆரையம்பதி, மட்டக்களப்பு)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -
**குமா** [சுப்பையா தனபாலசிங்கம் - தண்ணீர்த் தாங்கியடி, முருங்கன், மன்னார்]

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - நெல்லிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**செந்தூரன்** (ஆறுமுகம் கணேசமூர்த்தி - 40-ம் கிராமம், மட்டக்களப்பு)
**முருகன் / பசிலன்** (சாமித்தம்பி முருகமூர்த்தி - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)
**சைமன்** (வீரக்குட்டி நேசகுமார் - இலுப்பையடிச்சேனை, செங்கலடி, மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**2-ம் லெப். ஆஷா ஈசன்** (வல்லிபுரம் விமலேஸ்வரன் - 'தாயகம் சமுத்திரதாரா' சரசாலை வடக்கு)

திருக்கோணமலை ஆலங்கேணி, சுள்ளிமுறித்தான் தீவுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

கிளிநொச்சியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுமி - இரணைமடுச் சந்திக்கு அண்மையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -
**2-ம் லெப். தேவன்** (சின்னத்தம்பி மகாதேவன் - (ஈசன்) - ஒதியமலை, நெடுங்கேணி, மணலாறு)

கிளிநொச்சி-பரந்தன் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -
**சீலன்** [செ. தர்மரட்ணம் - மன்னார்]


கிளிநொச்சி /பரந்தன், முரசுமோட்டைப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -
**டெனா** [வல்லிபுரம் யோகேஸ்வரன் - வவுனியா]
**சிட்டன்** [வவுனியா]
**கப்டன் பிரபா** [தாரணி திருநீலகண்டன் - கொல்லங்காடு, மயிலிட்டி]
**தங்கப்பா** [வீரசிங்கம் செல்வநாயகம் - கெருடாவில் தெற்கு, குடியேற்றம்]
**முத்து**

ஆனையிறவு/குறிஞ்சாத்தீவுப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -
**தசரதன் / தாகன்** [செல்லையா குமாரவேல்-72 45, இராசசிங்கம்வீதி, குருநகர், யாழ்]

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து அப்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**மேஜர் ரட்ணராஜ் / ரெட்டி** [தம்பிப்பிள்ளை அந்தோனிதாசன் - மருத்துவமனை வீதி, மன்னார்]
**லெப். விஜயன்** [வேலுப்பிள்ளை மாரிமுத்து -

## ஆண்டு மூன்றிலும்
# அலைமோதும் நினைவுகள்





## லெப்டினனட் ஆஷா

வல்லிபுரம் விமலேஸ்வரன் (ஈசன்)

| தாயகத்தாய் மடியில் : | தமிழீழத்தாய் விடிவில் : |
|---|---|
| **11 - 01 - 1969** | **22 - 07 - 1989** |

கோட்டானைப் போற்பதுங்கி நின்றான் கொடியவன்
அண்ணையிலும் நாட்டினிலும் கண்ணை வைத்தான்
நாட்டாலே மொழியாலே புகழைத் தேக்கிய
நம்வீரர் வாழ்வினிலே நஞ்சைச் சேர்த்தான்

கேட்டதாலே எரிமலையாய்க் குமுறிய உன் நெஞ்சம்
கிளர்போரிற் குதித்திடவே சிந்தை கொண்டாய்!
நாற்றிசையும் புகழ்வீசும் தமிழை உந்தன்
நற்றாயென்றெண்ணி மகிழ் நெஞ்சம் கொண்டாய்!

மாற்றலரின் அடிகளிந்த மண்ணில் என்றும்
மறந்தேனும் படியவிடா வீரம் கொண்டாய்!
காற்றினிலும் கடிதாகச் சென்றாய் அங்கோர்
களங்காணும் நாளே நின் பெருநாளென்றாய்!

ஆற்றாது புறங்காட்டும் பகைவர் காட்சி
அழகான பெருநாளின் விருந்தே யென்றாய்!
மறவர்களாம் எமது திறல் முழுதும் காட்டி
மறலிக்குப் பெருவிருந்து கொடுப்போம் என்றாய்!

அஞ்சார்க்கு சாவென்ப தொன்றுமில்லை யென்று
அருந்தமிழின் செல்வமே நீவிரைந்தே போனாய்!
சென்றிட்டாய் தமிழோடு நாடும்காக்க - எம்செல்வமே
நீ நிலையன்றோ? சிலையாய் நின்றாய்!

''தாயகம்''
''சமுத்திரதாரா'', சரசாலை (2814)

ஆஷா குடும்பத்தினர்

---

(சேதுலிங்கம் கிருஷ்ணவரதன்)
அவர்களின் சிரார்த்ததினம்

திதி: 22 · 07 · 1992

தீராதி தீர, திலக் ஈழ மலர்வின்பம்
ஆராமை நீடாது அதுகாண்பீர் ஆணையிது!
வீராதி வீர, வேங்கை திலக் நீர்மறைந்து
ஓராண்டு சென்றதுகாண் உள்ளீர் நின் தோழருடன்!

தந்தையார்: திரு சு. சேதுலிங்கம்
தாயார்: திருமதி சே. வள்ளியம்மா,
சகோதரியர்: செல்வியர் சே. வரதா, சே. ராதா, சே, அருணா

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை
22. 07. 92 (2852)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | வீரச்சாவு |
|---|---|
| 18 | 03 |
| — | — |
| 01 | 08 |
| — | — |
| 1974 | 1991 |



### 2 ஆம் லெப். நிசாந்தி

(வைத்திலிங்கம் லெட்சுமி)

ஆனையிறவு அன்று உன்களம்
அணைந்திடவில்லை தொடர்கிறது
- இன்றும்
எதிரிகளை தாக்கும் விடியலுகள் அங்கே
எய்துவார் உனது இலட்சியம்... உறுதி

ஆ. க. வெளிப்போரில் வீரமரணமடைந்த, மற்றும் வீரமரணமடைந்த மாவீரர்கட்கும் எமது அஞ்சலிகள்.

தமிழீழத்திற்காகப் போராடும் போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.

வைத்திலிங்கம் சகோதர,
சகோதரி குடும்பத்தினர்.
[2850]

---

**மேஜர் ரட்ணராஜ் / ரெட்டி** [தம்பிப்பிள்ளை அந்தோனிதாசன் - மருத்துவமனை வீதி, மன்னார்]

**லெப. விஜயன்** [வேலுப்பிள்ளை மாரிமுத்து - சீனிவாசன்வீதி, கொட்டடி, யாழ் ]

**லெப். ஜேம்சன்** [சாந்தையா ராமு- இந்துபுரம்,முருகண்டி, கிளிநொச்சி]

**லெப். அசோக்** [வைத்திலிங்கம் கணேஷ் குமார் - கண்டிவீதி, மாங்குளம், முல்லைத்தீவு[

**லெப்· திலக்** [சேதுலிங்கம் கிருஸ்ணவரதன் - ஆதி கோயிலடி, வல்வெட்டித்துறை, யாழ்.]

**லெப். அன்பன் மாஸ்ரர்** [முருகராசா சிறிதர் - தீருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை, யாழ்.]

**2-ம் லெப். எழில்** [சந்திரசேகரம் சசிகரன் - மயிலங்கூடல், இளவாலை, யாழ்]

**ரஜந்தன்** [ஆறுமுகம் செல்வரட்ணம்]

**2–ம் லெப். சண்** (கிருஸ்ணசாமி கணேஸ் -றிக்மேன் டிவிசன், மடுக்கல)

**வில்சன்** (வேலுப்பிள்ளை சந்திரகுமார் வடலிஅடைப்பு, பண்டத்தரிப்பு, யாழ்.)

**கைலன்** [அரியரட்ணம் குசந்தன் - வட்டுக்கோட்டை மேற்கு, யாழ்.)

**நிசாந்தன்** (அருளானந்தம் யூட்அன்ரனி -நெடுந்தீவு மத்தி, தீவகம், யாழ்)

**மணிவாசகன்** (கணேசநாதன் ஜனார்த்தனன் - இல 68,'கௌரிவாசம்'காரைக்கால் வீதி, இணுவில் கிழக்கு,யாழ்.)

**சங்கர்** (சுப்பிரமணியம் கருணாநிதி - சிவன்கோயிலடி, எழுதுமட்டுவாள், யாழ்.)

**பிறேம்நாத்** (சீனிவாசன் கௌரிநாதன் பிரதானவீதி, திருக்கோயில், அம்பாறை)

**இந்திரன்** [சண்முகம் பாஸ்கரன் - வீசம்கேணி வீதி, கிரான், மட்டக்களப்பு)

**கப்டன் அரசன்** (சோமசேகரம் யோகேந்திரன் - 31, நடுத்தெருஒழுங்கை, கண்டிவீதி, அரியாலை, யாழ்)

**சிவமூர்த்தி** (மகாலிங்கம் சதீஸ்வரன் -2ஆம் வட்டாரம், புங்குடுதீவு, யாழ்.)

**அறிவொளி** (சிறிபத்மநாதன் சத்தியசீலன் - 25, விதானையார்வீதி, சுண்டுக்குழி, யாழ்.)

வவுனியா - சூடுவெந்தபுலவு பகுதியில் சிறிலங்கா இராணுவ காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய-

**லெப். பாண்டியன்** (செல்லையா சிவதாஸ்- வேப்பங்குளம்,ஓமந்தை, வவுனியா

**ஜீவா** (அஞ்சரன் மேகன் - கரடிப்பூவல், புத்தளம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி/4730]

சிந்தனைக்கு

தான் ஆடாதே போனாலும், தன் சதை ஆடும்.
—தமிழ்ப் பழமொழி-

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22- 07- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# தமிழீழம் - தமிழகம் தொப்புழ் கொடி உறவு

தலைவர் பிரபாகரனின் படத்தினை ஏந்திய வாறு, நேற்று முன் தினம் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று சென்னையில் இடம்பெற்றது. பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமையில், இருபது அமைப்புக்கள் பங்குபற்றிய இவ் ஆர்ப்பாட்டத்தின் போது இந்தியா விடுதலைப்புலிகள் மீது விதித்துள்ள தடையை ரத்துச் செய்யக் கோரியும், இலங்கையில் தொடர்ந்து நடந்து வரும் இனப்படுகொலையை தடுத்து நிறுத்துமாறும், சிறிலங்காவினுடனான சகல உறவுகளையும் இந்தியா துண்டிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சுமார், இருமாதங்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகள்மீது இந்திய அரசு தடை விதித்தபின்னர் தமிழகத்தில்விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை தமிழருக்கும் ஆதரவாக மேற்கொள்ளப்பட்ட பெரும் ஆர்ப்பாட்டம் இதுவாகும். இருபது அமைப்புக்கள் பங்குபற்றிய இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம், தமிழக மக்களையும், இலங்கைத்தமிழ் மக்களையும் பிரித்து விட முடியாது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்தது.

இந்தியாவின் பிரபல அரசியல் விமர்சகர் 'அசோகமித்திரா' குறிப்பிட்டுள்ளது போல் ''ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும்இடையில்உள்ளது'தொப்புழ்கொடிஉறவு விடுதலைப் புலிகளைத் தடை செய்வதின் மூலம் தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் இடையே உள்ள உறவைத் துணடித்து விட்டால், ஈழத்தமிழர் பிரச்சினை எக்கேடு கெட்டுப் போனாலும் என்ன என்ற முடிவுடன் தமிழ் நாட்டுத் தமிழர்கள் இருந்து விடமாட்டார்கள்.'' இதனையே இவ்ஆர்ப்பாட்டம் காட்டுகின்றது.

தமிழகத்திற்கும் — ஈழத்தமிழருக்கும் இடையிலான இவ் உறவினை தனியாக அரசியல் லாபத்திற்காக எவரும் முழுமையாகப் பயன்படுத்தி விட முடியாது. இலங்கைத் தமிழருக்கும் தமிழக மக்களுக்கும் இடையில் உள்ளது இன உணர்வு. இதனைத் தமது, குறுகிய அரசியல் லாபத்திற்காக இந்திய ஒருமைப்பாடு என்பதற்குள் மறைத்து விட முடியாது. அதாவது, இந்தியாவின் தேசிய வாதமே கேள்விக்குரியதாக இருக்கையில் இத்

# அமெரிக்க நீதி

பனாமா ஜனாதிபதியாக இருந்தநொறியேகாவை கைதுசெய்த அமெரிக்க அரசு அவருக்கு நாற்பது வருடச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

போதைவஸ்துக் கடத்தற் குற்றச் சாட்டின் பேரில் அமெரிக்க இராணுவம் பனாமாவுள் புகுந்து அந்த நாட்டின் ஜனாதிபதியைக் கைது செய்தது.

ஓர் அந்நிய நாட்டின் தலைவர் ஒருவர் அமெரிக்க நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்யப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டது இதுவே முதற்தடவை.

போதைவஸ்துக் கடத்தல் சம்பந்தமாக இவர் மீது பத்துக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அதில் எட்டு நிரூபிக்கப்பட்டு அக்குற்றங்களின் பெயரால் நாற்பது ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச் சாட்டுகளிற்கான ஆகக்கூடிய தண்டனை நூற்றிஐம்பது வருட சிறைத் தண்டனையாகும். ஐம்பத்தைந்து வயதுநிரம்பிய நொறியேகாவுக்கு நூற்றிஐம்பது வருட சிறைத்தண்டனையை விதிக்காது நாற்பது வருட சிறைத்தண்டனை மட்டுமே விதிக்கப்பட்டுள்ளதாம்.

நொறியேகாவுக்குத் தண்டனை விதிக்கப்பட்டதும் தனது ஒய்வுகால வாசஸ்தலத்தில்தங்கியபடிஅமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஓர் அறிக்கை ஒனறை வெளியிட்டார். ''அமெரிக்கமக்களை போதைவஸ்து வியாபாரத்தால் துன்புறுத்தி இன்னல் படுத்திய நொறியேகா எனும் சர்வாதிகாரி தனது வயதின் தொண்ணூறுகள் வரை சிறையில் வாடட்டும்'' என்று அறிக்கை கூறுகின்றது. நாற்பது ஆண்டுகள் மட்டும் அவர் சிறையில் வாடட்டும் என்று புஷ் கூறவில்லை; அவர் தனது கிழட்டுப் பருவத் துயரத்தை சிறையில் அனுபவிக்கட்டும் என்று கூறுகிறார்.

ஒரு காலத்தில் அமெரிக்காவினதும் சி. ஐ. ஏ. யினதும் நெருங்கிய நண்பன் நொறியேகா. மத்திய அமெரிக்க நாடுகளில் கொம்யூனிஸ எதிர்ப்பு நடவடிக்கைகளின் பொருட்டு நொறியேகாவை சி ஐ ஏ. பலப்படுத்தி உதவி ஒத்தாசை புரிந்துவந்தது. இதனால் இவர் அமெரிக்காவின் பொம்மைபோல பயன்படுத்தப்படலானார். இப்பொம்மை நிலையைக் காலகதியில் விரும்பாத நொறியேகா சி. ஐ. ஏ. உடன் முரண்படலானார். பனாமாக் கால்வாய் விடயத்திலும் அமெரிக்காவின் விருப்பத்திற்குப் பணிய மறுத்தார்.

அமெரிக்க அரசும் அதன் உயிர் நாடியான சி. ஐ. ஏ.யும் சீற்றம் கொண்டது. நொறியேகாவின் மீது நடவடிக்கை எடுக்க வழிதேடியது. போதைவஸ்துக் கடத்தல் குற்றச்சாட்டுக்களை சுமத்தியது.

அமெரிக்க மக்களை நொறியேகா போதைவஸ்து கடத்தல் மூலம் கெடுக்கிறார்; இது தான் குற்றச்சாட்டின் தாற்பரியம். படையெடுப்புக்குச் சிலமாதங்கள் முன்னரே அமெரிக்க வெகுஜனத் தொடர்புச் சாதானங்கள் நொறியேகா மீதான போதைவஸ்துக் குற்றச்சாட்டுக்களை பிரசாரப் படுத்தத் தொடங்கின.

இற்றைக்கு நூற்றிஐம்பது வருடங்களுக்கு முன்பு அதாவது 1842ஆம் ஆண்டு அமெரிக்கரின் மூதாதையர்களான பிரித்தானியர் போதைவஸ்து சம்பந்தமாக நடந்துகொண்ட நடத்தையை இங்கு நினைவு கூர்வது பொருத்தம். அதாவது சீனாவில் பிரித்தானியர் அபின் கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்ட காலமது. சீன அரசு அபின் வியாபாரத்தைச் சட்டவிரோதமெனப் பிரகடனப்படுத்தி அதற்குப் பெரும் தடை நடவடிக்கைகளும் எடுத்திருந்தது. இதனையும் மீறி அபின் கடத்திச்சென்ற பிரித்தானிய கப்பல் ஒன்றைச் சீனர் கைப்பற்றி அபினை எரித்ததுடன். அபின் கடத்திச் சென்ற ஆங்கிலேயரைத் தண்டித்தனர். இதனைக் கண்டு சீற்றமடைந்த பிரித்தானிய அரசு சீனாவின் இந்நடவடிக்கைக்கு எதிராகப் பெரும் படையெடுப்பொன்றை 1842ஆம் ஆண்டு மேற்கொண்டது.

சீன அரசின் மீதான குற்றச்சாட்டு பின்வருமாறு அமைந்தது. அபின் வர்த்தகத்திற்குத் தடைவிதித்தது குற்றம் (இக்கால கட்டத்தில் பிரித்தானியாவில் அபின் வர்த்தகம் தடை செய்யப்பட்டிருந்தது) அபின் எரிக்கப்பட்டது குற்றம், அபின் கடத்தற்காரர்களான பிரித்தானியப் பிரஜைகள் தண்டிக்கப்பட்டது குற்றம். இம்மூன்று வகைக் குற்றச்சாட்டுக்களின் பேரில் சீனாமீது படையெடுத்த பிரித்தானிய அரசு சீனாவை யுத்தத்திற் தோற்கடித்தது. யுத்தத்தில் வென்ற பிரித்தானிய அரசு பின்வருமாறு தீர்ப்பு வழங்கியது. இந்த யுத்தம் பிரித்தானியாவிற்கு அநாவசியமான பொருட்சேதத்தையும் உயிர்ச்சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆதலினால் சீன அரசு அதற்கான யுத்த நஷ்டஈட்டைச் செலுத்த வேண்டும். அத்துடன் எரிக்கப்பட்ட அபினுக்கும், தண்டிக்கப்பட்ட ஆங்கிலேயரிற்கும் நஷ்டஈடு கட்ட வேண்டும். இவற்றிற்காக குற்றப் பணமும் கட்டவேண்டும். மேலும் சீனா சுதந்திரமாக வர்த்தகம் செய்துகொள்வதற்கென சில துறைமுகங்களை பிரித்தானியாவிற்கென சீன அரசு எழுத வேண்டும். மேற்படி நிபந்தனைகளுக்கெல்லாம் சீன அரசு உடன்பட்டது, ஒப்பந்தம் கைச்சாத்தானது.

பிரித்தானியரின் வாரிசுகளான அமெரிக்கர் இப்போது இன்னொரு வரலாற்று உதாரணத்தை உருவாக்கியுள்ளனர். ஒரு நாட்டின் தலைவனை போதைவஸ்து கடத்தல் தொழிலுக்கு காரணமாய் இருந்தார் என்று குற்றம் சாட்டி அந்த நாட்டின் மீது படையெடுத்து அத்தலைவனைக் கைதுசெய்து தமது நாட்டிற்கு கைதியாக கொண்டு சென்று தமது நாட்டில்விசாரணைசெய்து தமது நாட்டின்சிறையில்அடைக்கின்றமைதான் அந்த உதாரணம்.

சீன துறைமுகங்களைத் தனதாக்கிக் கொள்வதற்காக அன்று ''அபின் யுத்தம்'' நிகழ்ந்தது. பனாமாக் கால்வாயை தனதாக்கிக் கொள்வதற்காக இன்று ''போதைவஸ்து யுத்தம்' நிகழ்ந்துள்ளது. தனக்குச் சாதகமான முறையில் பொம்மை அரசாங்கமாக சீன அரசாங்கத்தை ஆக்குவதற்கு அன்று அபின் யுத்தம் நிகழ்ந்தது. பனாமாவில் தனக்கொரு பொம்மை அரசாங்கத்தை உருவாக்க இன்று'போதைவஸ்துயுத்தம்' நிகழ்ந்துள்ளது.

கடந்த மாதம் பனாமாவிற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி புஷ் பனாமா மக்கள் முன் தோன்றி உரையாற்ற முற்பட்டபோது மக்கள் கூக்குரலிட்டு அவரைப் பேச விடாது திருப்பி அனுப்பினர். நொறியேகாவுக்கு விதிக்கப்பட்டுள்ள அமெரிக்க தீர்ப்பை விடவும் புஷ்சிற்கு பனாமா மக்கள் விதித்த தீர்ப்பு வலியது.

சாரணன்

# திருவனந்த புரத்தில் பதற்றம் இராணுவம் தயார் நிலையில்

## இதுவரையில் நால்வர் பலி

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலத் தலை நகரான திருவனந்தபுரத்தைசூழவும் வன்முறை நீடிப்பதால் பதற்றம் நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மத்திய றிசேவ் பொலிஸ்படையின் நான்கு அணிகளும் தமிழ் நாடு பொலிசின் மூன்று அணிகளும் திருவனந்தபுரத்திற்கு அழைக்கப் பட்டுள்ளன.

வன்முறைக் கும்பலைக் கலைக்க பொலிசார் நேற்று முன்தினம் மாலை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கையில் வன்முறையாளர்களால் அடித்துக் கொல்லப் பட்டுள்ளார்.

அயோத்தியாவில் நீதிமன்ற ஆணைக்குப் புறம்பாக உத்தரப் பிரதேச அரசினால்

# மண்டேலாவின் நிபந்தனை பூர்த்தி செய்யப்படும்

-- டி. கிளார்க் அறிவிப்பு

(ஜொகனஸ் பேர்க்)

தென்னாபிரிக்க பலாத்காரம் சம்பந்தமாக ஐ. நா. விவாதம் நடக்கும் சமயத்தில் தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி. கிளார்க் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் நிபந்தனைகளை

தூதுக்குழுவொன்றை அனுப்பி பலாத்காரம் பற்றி ஆராய வேண்டும் என மண்டேலாவின் கட்சி கேட்டிருக்கிறது.

அபாயமான ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் மீது

# ஜே.ஆரின்மானநஷ்ட கடிதம் ஏற்றுக்கொள்ள மறுப்பு

(கொழும்பு)

நூறு மில்லியன் ரூபா மான நஷ்டம் கோரி முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் சட்டத் தரணிகளால் அனுப்பப்பட்ட கடிதத்தைப் பெற்றுக்கொள்ள டயான் ஜயதிலக்க மறுத்துவிட்டார். இதன் காரணமாக அக்கடிதம் அனுப்பியவரையே திரும்பச் சென்றடைந்தது.

ஜெயவர்த்தனாவின் சட்டத்தரணியான ஜோன் வில்சன் என்பவரால் எழுதப்பட்ட மேற்படி கடிதத்தில் எனது தரப்பு வாசியான ஜெயவர்த்தனாவிற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சண்டே ஒப் சேவர் பத்திரிகையின் மே 10 ஜூன் 14 ஆம் திகதிய வெளியீடுகளில் அனுருத்த திலக்சிறி என்னும் பெயரில் கட்டுரைகள் எழுதியதாகக் குற்றம் கணிப்பு என்ற நாடகமாடியது, நீதிபதிகளைப் பயமுறுத்தி வைத்திருந்தது, உயர்நீதிமன்ற நீதியரசர்களின் திகதியிடாத ராஜினாமாக் கடிதங்களைப் பெற்று வைத்திருந்தது, பயங்கரவாத தடைச் சட்டத்தை அறிமுகமாக்கியது, யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது என்பன தொடர்பாக பல்வேறு விடயங்களுக்கு காரணகர்த்தாவாக இருந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இந்தக் குறிப்பிட்ட கட்டுரைகளால் தமக்கு அபகீர்த்தி ஏற்பட்டதாகக் கூறியிருக்கும் ஜே. ஆர் ஜெயவர்த்தனா தான் நாட்டின் தலைவர் என்ற வகையில் அமைச்சரவைத் தீர்மானங்களையே

லைப் புலிகளைத் தடை செய்வதின் மூலம் தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் இடையே உள்ள உறவைத் துண்டித்து விட்டால், ஈழத்தமிழர் பிரச்சினை எக்கேடு கெட்டுப் போனாலும் என்ன என்ற முடிவுடன் தமிழ் நாட்டுத் தமிழர்கள் இருந்து விடமாட்டார்கள்." இதனையே இவ் ஆர்ப்பாட்டம் காட்டுகின்றது.

தமிழகத்திற்கும் — ஈழத்தமிழருக்கும் இடையிலான இவ் உறவினை தனியாக அரசியல் லாபத்திற்காக எவரும் முழுமையாகப் பயன்படுத்தி விட முடியாது. இலங்கைத் தமிழருக்கும் தமிழக மக்களுக்கும் இடையில் உள்ளது இன உணர்வு. இதனைத் தமது குறுகிய அரசியல் லாபத்திற்காக இந்திய ஒருமைப்பாடு என்பதற்குள் மறைத்து விட முடியாது. அதாவது, இந்தியாவின் தேசியவாதமே கேள்விக்குரியதாக இருக்கையில் இத் தேசியத்தைக் காட்டி இன உணர்வை மழுங்கடித்து விட முடியாது. உலகில் எங்கும் நாடு என் ரீதியில் இன உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டதற்கான சான்றுகள் இல்லை. எழுபது ஆண்டு கம்யூனிஸ்ட் ஆட்சியினால் கூட சோவியத்யூனியனில் இருந்த இனங்களின் உணர்வை மழுங்கடித்துவிட முடியவில்லை.

இதைத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உணர்ந்திருக்கவில்லை. புலிகளைத் தடை செய்வதன் மூலம் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையில் உள்ள உறவைத் துண்டித்துவிடலாம் என எண்ணினார். தி.மு.க.வை ராஜீவ் காந்தி கொலையுடன் தொடர்பு படுத்துவதன்மூலமும், தடாசட்டத்தின்மூலமும், ஏனைய அரசியற் கட்சிகளை மிரட்டுவதன் மூலமும், இலங்கைத் தமிழருக்கு ஆதரவான சக்திகளை முற்றாக முடக்கி விடலாம் எனக் கற்பனை செய்திருந்தார்.

ஆனால், தமிழகம் அதற்குக் காத்திருக்கவில்லை, ஜெயலலிதாவின் தடைகளையும் மீறித் தனது உணர்வுகளை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது. ஆனால், இது ஆரம்பம் மட்டுமே. இதன் தொடர்ச்சிகள் பலமானதாகவே இருக்கும். இவை இயற்கையான அனுதாப உணர்வுகள். இவ் உணர்வுகளை ஜெயலலிதா அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாது. அவ்வாறு கட்டுப்படுத்த முனைந்தால், "ஆத்திரம் கொண்ட மக்கள் பொங்கி எழுவார்கள். எரிமலையாக வெடிப்பார்கள். எதிர்ப்புக்கள் பெரும்பாலும் வன்முறையானதாகவே இருக்கும்" இது "மேடம்" ஜெயலலிதாவின் ஆட்சிக்கு மட்டுமல்ல, இந்திய மத்திய அரசிற்கும் சவாலானதாகவே அமையலாம்.

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலத் தலை நகரான திருவனந்தபுரத்தைசூழவும் வன்முறை நீடிப்பதால் பதற்றம் நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மத்திய றிசேவ் பொலிஸ்படையின் நான்கு அணிகளும் தமிழ் நாடு பொலிசின் மூன்று அணிகளும் திருவனந்தபுரத்திற்கு அழைக்கப்பட்டுள்ளன.

வன்முறைக் கும்பலைக் கலைக்க பொலிசார் நேற்று முன்தினம் மாலை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கையில் வன்முறையாளர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

அயோத்தியாவில் நீதிமன்ற ஆணைக்குப் புறம்பாக உத்தரப் பிரதேச அரசினால் இராமர் ஆலயம் கட்டப்படுவதைக் கண்டித்து நேற்று முன்தினம் திருவனந்தபுரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே கலவரம் மூண்டதில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

கேரள மாநிலத்தில் நிகழ்ந்த வன்முறையில் இது வரையில் நால்வர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# மண்டேலாவின் நிபந்தனை பூர்த்தி செய்யப்படும்

**- டி. கிளார்க் அறிவிப்பு**

(ஜொகனஸ் பேர்க்)

தென்னாபிரிக்க பலாத்காரம் சம்பந்தமாக ஐ. நா. விவாதம் நடக்கும் சமயத்தில் தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி. கிளார்க் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளார்.

அதேவேளைஅரசாங்கத்தை வீழ்த்தும் காங்கிரஸின் இயக்கத்தினால் நிலைமையில் கொந்தளிப்பு ஏற்பட்டு பலாத்காரம் பெருகும் என்றும் தெரிவித்தார்.

பலாத்காரத்தைத் தூண்டி வரும் பிரச்சினைக்குரிய பாதுகாப்புப் படைப் பிரிவுகளைக் கலைத்து விடப் போவதாய் கிளார்க் தெரிவித்திருக்கிறார்.

மறுசீரமைப்பாக 32, 31 ஆவது படைப் பிரிவுகளைக் கலைத்து விடுவதெனவும் இதில் உள்ளவர்கள் ஏனைய படைப்பிரிவுகளில் இணைக்கப்படுவார்கள் எனவும் நமீபிய கிளர்ச்சி எதிர்ப்பு பொலிஸ் பிரிவும் அதேபோல் உடைக்கப்படும் எனவும் கிளார்க் தெரிவித்தார்.

கோவோட் என அழைக்கப்படும் இந்தப் பொலிஸ்படையில் நமீபியர்களும், அங்கோலா வாசிகளும் உள்ளனர்.

பேச்சுவார்த்தைகளை மறுபடியும் ஆரம்பிக்க ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் 14 நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் விசேஷ கூட்டம் தென்னாபிரிக்காவுக்கு விசேஷ தூதுக்குழுவொன்றை அனுப்பி பலாத்காரம் பற்றி ஆராய வேண்டும் என மண்டேலாவின் கட்சி கேட்டிருக்கிறது.

அபாயமான ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் மீது பொலிசார் நடவடிக்கை எடுத்துக் கொள்வர் என கிளார்க் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை வீழ்த்தும் முயற்சியில் பொலிஸ் நிலையங்கள், அரசாங்க கட்டடங்கள், காரியாலயங்கள், ஒலிபரப்பு நிலையங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதும் ஆகஸ்ட் 3 இல் பொதுவேலை நிறுத்தத்தை நடத்துவதும் சில அம்சங்கள் ஆகும்.

# இத்தாலியில் குண்டுவெடிப்பு; 6 பேர் பலி, 15 பேர் காயம்

(ரோம்)

இத்தாலியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு நீதிபதி உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 15 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்ததாகவும், குண்டுவெடித்ததால் வீதியின் ஒரு பகுதியே சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போதை மருந்து குற்றங்களில் சம்பந்தப்பட்டிருந்த கும்பலை தண்டித்த நீதிபதியை கொலை செய்யும் நோக்கத்துடன் தான் இந்தக்குண்டு வைக்கப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## வீதி விபத்தில் 6 பேர் உயிரிழப்பு

சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலை வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் ஐந்து பெண்கள் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராமர் கோவில் கட்டுவதில் இந்துக்கள் விடாப்பிடி

அயோத்தியா நகரில் இராமர்கோயில்கட்டும்பணி நேற்று வரை பன்னிரெண்டாவது நாளாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதில் சுமார் ஆயிரம் இந்து மக்கள் மற்றும் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

பக்கத்திலுள்ள மசூதியை விஸ்வஹிந்து பரிஹித் தொண்டர்கள் இடிக்கும் முயற்சியில் இறங்கக் கூடும் என்று அஞ்சப்படுவதால்விஸ்வஹிந்துபரிஷித் இயக்கம் தனது கட்டுமாணப் பணியைக் கைவிட வேண்டும் என்று பிரதமர் நரசிம்மராவ் கேட்டுள்ளார். ஆனால் இந்த வேண்டுகோளை விஸ்வஹிந்து பரிஷித் நிராகரித்துவருவதால் உத்தரப்பிரதேச மாநிலபாரத ஜனதாக் கட்சி ஆட்சியைஅரசு கலைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அல்லது அயோத்தியாவில் சர்ச்சைக்குரிய இடத்தை மத்திய அரசு சுவீகரிக்கக் கூடும் என்றும் நம்பப்படுகிறது.

விஸ்வ ஹிந்து பரிஷித் இயக்கம் நீதிமன்ற ஆணைக்குக் கட்டுப்பட மறுப்பதால். அந்த இயக்கத்தையே தடை செய்ய வேண்டும் எனப் பஞ்சாப் சீக்கியப் போராளிகளின் ஆதரவாளரான சிங் ரஞ்சித்சிங் மான் கோரியுள்ளார்.

அயோத்தியாப் பிரச்சினையை பிரதமர் சரியாககையாளவில்லை என்றும் அதனால் பிரதமர் பதவி விலக வேண்டும் எனவும் கம்யூனிஸ்ட் கட்சி லோக்சபாவில் தெரிவித்துள்ளது.

இதே வேளை இராமர் கோயில் கட்டுமாணப் பணியில் பிரதமர் தலையிடக் கூடாது என்று கோரிய பாரத ஜனதாக் கட்சியும், விஸ்வ ஹிந்து பரிஷித்தும் இந்தியாவில் பல நகரங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளன. நேற்று புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவ் உள்துறை அமைச்சர் இருப்பிடங்களின் முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பிரதமர் பதவி விலக இவர்களும் கோரிக்கை விடுத்தனர்.

அனுப்பப்பட்ட கடிதத்தைப் பெற்றுக்கொள்ள டயான் ஜயதிலக்க மறுத்துவிட்டார். இதன் காரணமாக அக்கடிதம் அனுப்பியவரையே திரும்பச் சென்றடைந்தது.

ஜெயவர்த்தனாவின் சட்டத்தரணியான ஜோன் வில்சன் என்பவரால் எழுதப்பட்ட மேற்படி கடிதத்தில் எனது தரப்பு வாசியான ஜெயவர்த்தனாவிற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் மே 10 ஜூன் 14 ஆம் திகதிய வெளியீடுகளில் அனுருத்த திலக்சிறி என்னும் பெயரில் கட்டுரைகள் எழுதியதாகக் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

இக் குறிப்பிட்ட கட்டுரைகளில்தனது ஆட்சிக்காலத்தில் ஜே.ஆர் அரசியலமைப்பின் மூலம் ஜனநாயகத்தை இழுத்து நசுக்கியது, 1980 ஆம் ஆண்டின் பொதுவேலை நிறுத்தத்தை அமுக்கியது, கருத்துக்களைப் பெற்று வைத்திருந்தது, பயங்கரவாத தடைச் சட்டத்தை அறிமுகமாக்கியது, யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது என்பன தொடர்பாக பல்வேறு விடயங்களுக்கு காரணகர்த்தாவாக இருந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இந்தக் குறிப்பிட்ட கட்டுரைகளால் தமக்கு அபகீர்த்தி ஏற்பட்டதாகக் கூறியிருக்கும் ஜே. ஆர் ஜெயவர்த்தனா தான் நாட்டின் தலைவர் என்ற வகையில் அமைச்சரவைத் தீர்மானங்களையே நடைமுறைப் படுத்தியதாகவும், அமைச்சரில் பிரதமர் பொறுப்பிலும், பதில் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் பொறுப்பிலும் தற்போதைய ஜனாதிபதி பிரேமதாசா இருந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார் என்பது தெரிந்ததே.

# இலங்.65 சதவீதமானோர் போதைப் பொருள் பாவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையில் 65 சதவீதமான இளைஞர்களும் வயதுவந்தோரும் மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையாகியுள்ளார்கள் என இலங்கைமதுவிலக்குக் கழகம் அறிவித்துள்ளது.

நாற்பதினாயிரத்துக்கும் அதிகமானோர் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளனர். இலங்கையில் புகைப்பிடிப்பதனால் இறப்பவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வயதினர் ஆவர் இவர்களில் 40 சதவீதத்தினர் கடுமையாகப் புகைப் பிடிப்பவர்கள் இவ்வாறு அச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# மகாநாயக்கர் ஒத்துழைப்பை அரசு என்றும் பெறுகிறது

**- பிரேமதாசா**

(கொழும்பு)

அரசாங்கம் மூன்று பீடங்களையும் சேர்ந்த மகாநாயக்கர்களின் ஒத்துழைப்பையும் வழிகாட்டுதல்களையும் எப்போதும் பெற்றுவருகிறது என்றுசிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஒரு மத வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் மகாசங்கத்தினரும், ஏனைய மதப் பெரியார்களும் கூறும் கருத்துக்கள் நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு உதவி வருவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு எந்த ஆட்சியும் வழங்காத முக்கியத்துவத்தை தமது அரசு பௌத்த மதத்திற்கு கடந்தமூன்றாண்டுகளாக வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்

## பழப்பாகு தயாரிப்பு

புளியம் பழத்திலிருந்து பழப்பாகு தயாரிக்கும் பரீட்சார்த்த முயற்சியினை தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் உணவு பதனிடல் பிரிவு மேற்கொண்டுள்ளது மேலும் தோடம்பழத்திலிருந்து பரீட்சார்த்தமாக பழப்பாகு தயாரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

உள்ளூரில் பெறக்கூடிய பழ வகைகளை பதனிட்டு மென்பானங்கள், பழப்பாகு வகைகளைத் தயாரிக்கும் பணியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் உணவு பதனிடல் பிரிவுசெயற்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

உள்ளூர்பழச்செய்கையாளர் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

# நீதிமன்ற உத்தரவு எதுவும் மீறப்படவில்லை

**- உ. பி. அரசு அறிவிப்பு**

(டில்லி)

அயோத்தியாவில் இராமர் ஆலயம் கட்டும் விவகாரம் தொடர்பாக நீதிமன்ற உத்தரவுகள் எவையும் மீறப்படவில்லை என்று உத்தரப் பிரதேச அரசு உயர்நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளது.

வழிபாட்டுஏற்பாட்டிற்காக சம்பந்தப்பட்ட இடத்தில் நிலத்தை சமன்படுத்தும் பணியை மட்டும்தான் உத்தரப் பிரதேச அரசு மேற்கொண்டிருக்கிறது என்றும் பைஸாபாத் மாவட்ட மாஜிஸ்திரேட் உத்தரப் பிரதேச அரசின் சார்பில் தாக்கல்செய்த உறுதி மொழிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாதம்

# தாயக விடுதலைப் போராட்டத்தின் சுவடுகள் பதித்துள்ள நெருப்புமழை

**- புதுவை இரத்தினதுரை**

(யாழ்ப்பாணம்)

''தமிழரின் தாயக விடுதலைப் போராட்டத்தின் சுவடுகளை இந்த ''நெருப்புமழை'' என்னும் கவிதைத் தொகுதி பதித்து விட்டிருக்கிறது. இவ்வாறான கவிதை இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்காக வேனும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைப் புரிந்து கொள்ளுங்கள், போராட்டத்துடன் இணைந்து நில்லுங்கள்''.

இவ்வாறு நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் திரு. வாஞ்சிநாதனின் ''நெருப்பு மழை'' என்ற கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழாவில் சிறப்புரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்; கவிதை தான் தமிழ் இலக்கியங்களில் மூத்த இலக்கிய வடிவம். இது ஆதிகால தமிழர் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்றார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் இடம் பெற்ற விழாவை யாழ். மாவட்டதளபதி செல்வராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இக் கவிதைத் தொகுதியின் வெளியீட்டு உரையை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில், இந் நூலில், கருத்துக்கள் சொல்லப்படுகின்ற முறை அழகாக உள்ளது. எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் கூட இப் போதைய தேவைக்கு இன்றியமையாதனவாக உள்ளன.

இந் நூலிலே போராட்ட வளர்ச்சிக்குத் தேவையான மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல இருக்கின்றன. விடுதலைப் போருக்கு வீறு சேர்க்கின்ற வகையில், தாய் மொழிகள் பற்றி, தமிழினம் பற்றி, எமது தலைவனைப் பற்றி, போராளிகளைப்பற்றி, மாவீரர்களைப் பற்றி, எமது குறிக்கோள்களைப் பற்றி, இயற்கைபற்றி, அடிமை விலங்கினை உடைக்க வேண்டிய தேவைபற்றி, பெண்ணொடுக்கு முறைகளைச் சாடுகின்ற வகையிலே பல விடயங்கள் சொல்லப்படுகின்றன. 81 பாடல்களைக் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

இந் நூலை மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியை நிதர்சனப் பொறுப்பாளர் பரதன் பெற்றுக் கொண்டார்.

இந் நூலின் ஆய்வுரையை திரு. இ. முருகையன், திரு. காரைசுந்தரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து திரு சிற்பி சிறப்புரை நிகழ்த்தினார் இறுதியாக நூலாசிரியர் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் பதிலுரை வழங்கினார். மண்டபம் நிரம்பி வழியும் மக்கள் கூட்டம் இவ் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டது.

## பெறுபேறு வெளியாகியது

யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானி விசேட பிரிவின் 1990ஆம் ஆண்டிற்கான பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

தாவரவியல், இரசாயனம், பௌதிக இரசாயனம், புள்ளி விபரஇயல், கணிதம் ஆகிய பாடங்களின் பெறுபேறுகளே நேற்று வெளியாகியவை ஆகும்.

## வட-கிழக்கிற்கு வர்த்தமானி அனுப்பப் பணிப்பு

அரச சேவைக்கு 3,500 லிகிதர்களைச் சேர்ப்பது தொடர்பாகக் குறிப்பிட்ட வர்த்தமானியைகூட்டுப்படைத்தலைமையகத்தின் ஊடாக சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கத்தின் மூலம் தொடர்புகொண்டு வட-கிழக்குப் பிரதேச செயலகங்களுக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தனது அமைச்சு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி அரச கூட்டுத்தாபன வெற்றிடங்கள் பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படும் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு நிரப்படவுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஆகஸ்ட் 7-ம்திகதி எனவும், போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் செப்டம்பர் மாதமளவில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

அரச மாகாண அமைச்சுக்களுக்கான வெற்றிடங்களுக்கும், அரச கூட்டுத்தாபன சபைகளுக்கான வெற்றிடங்களுக்கும் 18 - 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பாறை

...யிலான சிந்தனைகளோடு செயற்பட்டதால் கடந்த பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஒரே ஒரு முஸ்லிம் மட்டுமே தெரிவு செய்யப்பட்டதை நன்குணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## அகதிகள் குடியிருந்தகாணி அரசால் சுவீகரிப்பு

வவுனியா சாந்தசோலைப் பகுதியில் சுமார் 75 அகதிக் குடும்பங்கள் குடியிருக்கும் 100 ஏக்கர் காணி அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படவுள்ளது.

இணைந்த பல்கலைக்கழகத்தின் தேவைக்கு என இக் காணிகள் சுவீகரிக்கப்பட உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.


## இனங்காணாத சடலம் அடக்கம் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை குருநகர்க் கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கிய ஓர் ஆணின் சடலம் நேற்று முன்தினம் வரையும் எவராலும் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையினரால் அடக்கம் செய்யப்பட்டது.

இச் சடலம் இந்திய மீனவருடைய சடலமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (பா)

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



**லெப். அன்பன் மாஸ்ரர்**

[செ. முருகராசா - ஸ்ரீதர் (ஸ்ரீ அப்பா)]

வீரஜனனம் 12 . 06 . 1971

வீரச்சாவு 22 . 07 . 1991

வீட்டுத் திதி 08 - 08 - 1992

அன்று அந்தியேட்டியும் நடைபெறும்.


பாடசாலை அபிவிருத்திச் சபை
உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

இடம்:- குமாரசுவாமி மண்டபம்
காலம்:- 02-08-1992 ஞாயிறு
நேரம்:- காலை 10.00 மணி

மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்
(சி-4737)



திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர்
விளையாட்டுக் கழகம் நடாத்தும்
லெப். சங்கீதா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண


## ...டல

நீர்கொழும்பு கிறீன் பாத் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

பொருள்களின் விலையேற்றம் அரசாங்க சொத்துக்கள் மக்கள் மயமாக்கப்பட்டு வருதல் என்பன தொடர்பாக பொதுமக்களுக்கு எடுத்து விளக்குமுகமாக இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில். இரணவில, கந்தளகம ஆகியஇடங்களில் ஹோட்டல்கள் அமைக்கும் விடயத்தினால் கத்தோலிக்கர்களையும் பௌத்தர்களையும் அரசு பகையாக்கிக் கொண்டுள்ளது. இரணவிலவில் ஹோட்டல் கட்டுவதை கைவிட்டது போல கந்தளகமவிலும் ஹோட்டல் கட்டுவது நிறுத்தப்பட வேண்டும்,

ஐ.தே.க. அரசு மீது மக்கள் இன்று நம்பிக்கை அற்றவர்களாகி விட்டனர். அமைச்சர் தொண்டமான் நாட்டிற்கோ சிங்களவர்களுக்கோ நன்மை செய்வார் என்பதை எவரும் எதிர்பார்க்க முடியாது.

கடந்த காலங்களில் நம் நாட்டு இளைஞர்யுவதிகளுக்கு ஏற்பட்டுள்ள நிர்க்கதியை விசாரிக்க விசாரணைக் குழு ஒன்றை நியமிக்குமாறு நாம் கேட்டோம் ஆனால் அரசு அவ்வாறு குழு ஒன்றை நியமிக்காது சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்கிறது.

## பொலிசாரால்

...களான இந்த ஊர்காவல்படையினர் வாழைச்சேனை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். எனினும் சில மணிநேரத்தின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவரு...

## ஈராக் மீது விமான தாக்குதல் ஆலோசிப்பதாக தெரிவிப்பு

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஈராக் ஏற்கமறுத்ததை அடுத்து ஈராக்மீது விமானத் தாக்குதல் ஒன்றை நடத்தவேண்டிய நிலை உருவாகியுள்ளது என ஐ நா. பாதுகாப்புசபை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தப்படி நடந்து கொள்ளாது ஒப்பந்தத்தை ஈராக் ஏற்கமறுத்ததை அடுத்தே ஈராக்கிற்கு எதிரான நேசநாட்டு படைகளின் விமான தாக்குதல் தவிர்க்க முடியாத ஒன்று என அவ் அதிகாரி கூறினார்.

ஈராக்கின் விவசாயத்துறை அமைச்சகத்தை ஐ. நா சபை ஆய்வாளர்கள் பரிசோதனை செய்வதை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தடுத்து வந்தால் இன்னும் பத்து நாட்களுக்குள் சிறிய விமானத் தாக்குதல் ஒன்றை நடாத்த வேண்டி வரும் என அவ் அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## அமைச்சரும்

...றொழிலுக்கு செல்ல முடியுமெனவும் அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண மக்களுக்கான உணவு விநியோகத்தை தடுத்து வருவதால் யாழ்ப்பாணமக்கள் துன்பப்படுவதாக அமைச்சர் அமரதுங்க படையினர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.


## தேவை

இலத்திரனியல், தொழில்நுட்ப விஷயங்களைத் தமிழில் மொழிபெயர்க்கக் கூடியவர்களும், பிழைதிருத்தி மெருகூட்டி மீட்டெழுதவல்ல தமிழ் ஒப்புநோக்கர்களும். முன்னனுபவத்திற்கு முன்னுரிமை. தராதரப்பத்திரங்களுடன் விணணப்பிக்கவும்.

தொடர்பு
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

அண்ணன் வழியே சென்றாய்
அன்பன் மாஸ்ரரும் ஆனாய்
கட்டைக்காடு போரிலே களம் குதித்தாய்
கொடியவர் ஏவி விட்ட குண்டுக்கு இரை ஆனாயே
மீண்டும் வருவாய் என காத்து இருபபோம்
கண்விழி மூடாமல் உன்னை எதிர்பார்த்து இருப்போம்.
உன்னை நினைத்து நண்பர்கள் வீட்டுக்கு வருகிறார்களடா
உன் குடும்பமே சோகத்தில் வாடுதடா.

உன்பிரிவால் துயருறும்,
பெற்றோர், சகோதரர், சகோதரிகள்,
நண்பர்கள், சக போராளிகள்

திருவில் தெரு,
வல்வெட்டித்துறை. (2860)

## 2-ம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில்
05
—
09
—
1969

தமிழீழ மண்ணிற்காக
22
—
07
—
1990

## கப்டன் பிரபா
**(திருநீலகண்டன் தாரணி)**

(முன்னாள் கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்)

வீரமாணிக்கதேவன் துறை, குடும்பத்தினர்.
மயிலிட்டி. (சி/4722)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


லெப். சங்கீதா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண
கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
[ ஓவர் விளையாட்டு - 6 நபர்கள் பங்கு ]

இடம்:- ஞானவைரவர் சனசமூக நிலைய விளையாட்டு மைதானம்.

முடிவு திகதி;- 25 - 07 - 1992

போட்டி சம்பந்தமான விபரங்கள் யாவும், திரு S. தர்மராஜா இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (2854)

## ஓராண்டு நினைவஞ்சலி



## லெப். பாண்டியன்
(செல்லையா சிவதாஸ், ீவப்பங்குளம்,
ஓமந்தை, வவுனியா)
(சூடுவெந்தபுலவு சிறிலங்காப்படை காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தவர்)

**கல்லறையில் பூத்தது:- 22-07-1991**

மன்னாரின் மண்ணிலே உதித்த எம் வீரனே
வீறு கொண்டெழுந்தாயே வீணரை அழிப்பதற்கே
நீ கொண்ட தாகமே தமிழீழத் தாயகம்
தாயகம் காணவே நீ மறைந்து போனாயே

மண் மீட்க மண்ணோடு மண்ணாகி — போன
மங்காப் புகழ்படைத்த வீரனே நீ கொண்ட
இலட்சியத்தைக் காத்திடுவோம் — என்றும்
எதிரியிடம் மண்டியிடோம்.

இந்நாளில் மரணித்த போராளிகளுக்கு
எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

நொச்சிமோட்டை, புவனேஸ்வரன்
ஓமந்தை, வவுனியா. குடும்பத்தினர்,

(2869)

விக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

விமானப்

பட்டதிலிருந்து சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களினால் மீள முடியவில்லை. பல கோடி ரூபா பெறுமதியான விமானம் வீழ்ந்ததோடு 19 விமானமோட்டிகளும் கொல்லப்பட்டனர். இதில்கொல்லப்பட்ட விமானப்படையினரில் சிலர்உயரதிகாரிகளாவார்கள். அவர்கள் வெளிநாடுகளிலும் பயிற்றப்பட்டவர்களாவர்.

இவ்வாறான இழப்புக்கள் போர்முனையில் உள்ள இராணுவத்தினருக்கு 24 மணிநேரமும் தொடர்ந்தும் உதவமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதனை விமானப்படை உயர் அதிகாரிகள் சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளதோடு, புதிய போர் விமானங்களைக் கொள்வனவு செய்யுமாறும், விமானப்படைக்குப் புதிதாக ஆட்களைச் சேர்க்குமாறும் வற்புறுத்திவருவதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.

யாழ்நகர்

இராணுவத்தினர் வேட்டுக்களைத் தீர்த்தவண்ணமிருந்தனர்

இதற்கிடையே கொட்டடி மற்றும் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புத்தேடி பாதுகாப்பு வலயத்திற்குள் தஞ்சமடைந்தனர்.

★ ★

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய், பொன்னாலை ஆகிய பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை அகோர எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

அதிகாலை 6.00 மணிமுதல் தொடர்ச்சியாக நடைபெற்ற இத்தாக்குதலின்போது பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

(பா), (க)

(2851) யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

## தெலஸ்போர் இராசமாணிக்கம்

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட தெலஸ்போர் இராசமாணிக்கம் 21-07-92 அன்று காலமானார். இவர் ஞானாபரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லடிஸ்லாஸ், செபமாலை (கனடா), மேரி வைலட், டோமினிக் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தநாயகம் (இத்தாலி), மேரி றோஸ் (கனடா) ஆகியோரின் மாமனாரும், டயானா (கனடா) ஜெனாட், சாளற் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று 22 - 07 - 92 காலை 9 மணிக்கு புனித பிலிப்பு நேரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[2870] மேரி வைலட் (மகள்)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**21. 07. 1992**

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4947

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
27-8158, 28-1262, 26-3390, 24-9676, 27-463, 27-1141, 22-6897, 28-6020, 28-2049, 24-4361, 40-6979, 28-1928, 24-5964, 42-2364, 27-3927, 41-8432, 36-4582, 36-4376, 25-7135, 36-923, 36-4376, 70-7579.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
26-5517, 42-9325, 26-5143, 27-1375, 28-7662, 22-5535, 28-2343, 27-1072, 28-3969, 26-3741, 24-6855, 25-4381, 36 6155, 25-1958, 25-1091.